ADVERTORIAL

selangorku
www.selangorku.com



# RM 9.65 கோடி:

## நீர் விநியோகத்தை எடுத்துக் கொள்ள சிலாங்கூர் மக்கள் வழங்க முன்வந்தத் தொகை

**நீங்கள் முக்கியம் தெரிந்து கொள்ள வேண்டிய 10 விஷயங்கள்**

### 1 சிலாங்கூர் மக்களைப் பிரதிநிதிக்கும் மாநில அரசு நீர் விநியோகத்தை எடுத்துக் கொள்வதற்கு பேரம் பேச வேண்டிய அவசியம் என்ன?

நான்கு குடிநீர் ஒப்பந்த நிறுவனங் களை மாநில அரசு எடுத்துக் கொள்ளும் நோக்கில் இந்த பேரம் பேசப்படுகிறது. நீர் விநியோகத்தை எடுத்துக் கொள்வதன் மூலம் நீர் சேவைத் தொழில்துறையை மறு சீரமைப்புச் செய்ய முடியும். இதன் வழி மக்களுக்கு சுமையை ஏற்படுத்தாத வகையில் நீர் கட்டணத்தை உயர்த்துவது உள்பட நீர் விநியோகம் தொடர்பான அனைத்துப் பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியும்.

நீர் உரிமையை சிலாங்கூர் மக்களிடமே திரும்ப ஒப்படைக்கும் முயற்சிகளில் ஒன்றாக நீர் விநி யோகத்தை எடுத்துக் கொள்ளும் நடவடிக்கை விளங்குகிறது. மாநிலத்தை வழி நடத்துவதற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு நீர் தொழில் தொழில்துறையை நிர்வகிக்கும் உரிமை உள்ளது.

மேலும், நாம் வழங்க வந்த இந்த தொகை சம்பந்தப்பட்ட நிறுவனங் களுக்கு இழப்பை ஏற்படுத்தாது என நம்புகிறோம். காரணம், சம்பந் தப்பட்ட நிறுவனங்களின் பங் குரிமைக்கு ஏற்ப ஆண்டுக்கு 12% வருமானத்தை இது பிரதிபலிக் கிறது. வழக்கமாக, நீர் விநியோகத் துறைகளின் வருமானம் ஆண்டுக்கு 6% மட்டுமே இருக்கும்.

### 2 நீர் விநியோகத்தை எடுத்துக் கொள்ளும் நடவடிக்கையை சிலாங்கூர் அரசு எவ்வாறு மேற்கொள்ளும்?

ஒப்பந்த நிறுவனங்களின் பங்குரிமை (நடவடிக்கை மற்றும் நடப்பிலுள்ள பணியாளர்கள் உள்பட), சொத்துக்கள், கடன் ஆகியவற்றை எடுத்துக் கொள் வதற்கு ஏதுவாக சிறப்பு அமைப்பை (SPV)சிலாங்கூர் அரசுக்குச் சொந்தமான கும்புலான் டாருள் ஏசான் நிறுவனம் (KEDB) அமைக்கும். இதன் வழி கடந்த 2004ஆம் ஆண்டில் ஒப்பந்த நிறுவனங்களுடன் செய்து கொள்ளப்பட்ட தனியார் மய நீர் விநியோக ஒப்பந்தம் முடிவுக்கு வரும்.

அந்த சிறப்பு அமைப்பு நீர் விநியோக நடவடிக்கையை ஆக்ககரமான முறையில் கண் காணிக்கும். மக்களின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் திறன்மிக்க மற்றும் வெளிப்படையான நிர்வாக முறை உருவாக்கப்படும்.

### 3 நீர் விநியோகத்தை எடுக்க முடியாவிட்டால் எத்தகைய பாதகங்கள் ஏற்படும்?

நீர் விநியோகச் சேவை பழைய முறையிலே இருக்கும் என்பதோடு நீண்ட காலத் தீர்வு இல்லாத நிலை யில் நீர்ப் பற்றாக்குறை பிரச்னையை மக்கள் தொடர்ந்து எதிர்நோக்கி வர நேரிடும். பயனீட்டாளர்களின் நலனைக் காட்டிலும் தங்களின் லாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட தனியார் நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் கிள்ளான் பள்ளதாக்குப் பகுதியிக்கான குடிநீர் விநியோகத்தை தங்கள் கட்டுப் பாட்டில் வைத்திருப்பர். இதனால் ஏற்படக்கூடிய நீர் கட்டண உயர்வு மக்களுக்குச் சுமையை ஏற்படுத்தும் என்பதோடு வழங்கப்படும் சேவையும் கட்டண உயர்வுக்கு ஏற்ப அமையாது.

### 4 பினாங்கு, பேரா, மலாக்கா, ஜோகூர், நெகிரி செம்பிலான் ஆகிய மாநிலங்களில் நீர் விநியோகத் துறை மறுஆய்வு செய்யப்பட்டு விட்ட நிலையில் சிலாங் கூரில் மட்டும் அவ்வாறு செய்ய தாமதம் ஏற்படுவது ஏன்?

நீர் விநியோக உரிமையை மீண்டும் மாநில அரசுகளிடம் ஒப்படைக்க நீர் சேவைத் துறை சட்டம் (WSIA 2006) அனுமதியளிக்கிறது. நீர் சேவையை சிலாங்கூர் மாநில அரசு எடுத்துக் கொள்வதற்கு அமைச்சரவை கடந்த 2008 ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் தேதி அனுமதி வழங்கியது. எனினும் சிலாங்கூர் மாநிலத்தை மக்கள் கூட்டணி கைப்பற்றிய காரணத்தால் அந்த முடிவு அமல்படுத்தப்படவில்லை. பாரிசான் நேஷனல் அரசின் குறுகிய அரசியல் மனப்பான்மையும் கூட்டரசு உணர்வை குறிப்பாக, தங்களால் இயற்றப்பட்டு சட்டமாக்கப்பட்ட நீர் சேவைத் துறைச் சட்டத்தை தாங் களே மதிக்காத போக்கு நீர் விநியோகத்துறையின் மறுசீரமைப்புக்கு முட்டுக்கட்டையாக உள்ளது.

### 5 மாநில அரசின் பேரத் தொகை ஏற்கப்படாவிட்டால் என்ன நேரும்?

இந்த விற்பனை பேரம் விற்பவர், வாங்குபவர் விருப்பத்தின் அடிப்படையிலானது அல்ல. ஆகவே, நீர் சேவைத் தொழில்துறை சட்டத்தின் கீழ் ஒப்பந்த நிறுவனங்கள் இந்த பேரத்தை நிராகரிக்க முடியாது. மேலும், இது லாபத்தை அடிப் படையாகக் கொண்ட விற்பனை-கொள்முதல் வர்த்தக நடவடிக்கை அல்ல. நீர் மக்களின் உரிமை. தரமான குடிநீர் நியாயமான விலையில் கிடைப்பதை உறுதி செய்வதற்காக ஒப்பந்த நிறுவனங்களிடம் மக்கள் முன்வைக்கும் பேரம் இது.

இந்த பேரத் தொகைத் தொகைக்கு ஒப்பந்த நிறுவனங்கள் இணங்காவிட்டால் இவ்விவகாரத்தை அவை அனைத்துலக நடுவர் மன்றத்தின் கவனத்திற்கு கொண்டுச் செல்லலாம். அந்த சுயேச்சை அமைப்பு வழங்கும் எந்தத் தீர்ப்பையும் ஏற்றுக் கொள்ள சிலாங்கூர் அரசு தயாராக உள்ளது.

### 6 ஒப்பந்த நிறுவனங்கள் தங்கள் பணிகளை முறையாக ஆற்றத் தவறிவிட்டன என்பது உண்மையா?

ஷபாஸ் நிறுவனம் கடந்த 2012 வரை 16 கோடியே 96 லட்சத்து 40 ஆயிரம் வெள்ளியைச் செலவிட்டுள்ள போதிலும் வீணாகும் நீரின் (NRW) அளவு 33 விழுக்காடாக தொடர்ந்து இருந்து வருகிறது. ஒப்பந்தத்தின் படி ஷபாஸ் நிறுவனம் 78 கோடியே 41 லட்சம் ரிங்கிட் வெள்ளி மூலதனச் செலவின் வாயிலாக வீணாகும் நீரின் அளவை கடந்த 2012இல் 19.98 விழுக்காடாக குறைத்திருக்க வேண்டும்.

எனினும், ஷபாஸ் நிறுவனம் 99 கோடியே 57 லட்சம் வெள்ளிச் செலவிட்டுள்ள நிலையில் கடந்த 2011ஆம் ஆண்டில் வீணாகும் நீரின் அளவு 32.31 விழுக்காடாகவே இருந்தது.

சேவையை வழங்குவதில் தோல்வியைத் தழுவிய போதிலும் ஷபாஸ் நிறுவனம் ஒரு தலைப் பட்சமாக செய்யப்பட்ட ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு 37 விழுக்காடு (2009), 25 விழுக்காடு (2012) மற்றும் 20 விழுக்காடு (2015) குடிநீர்க் கட்டண உயர்வை அமல்படுத்தக் கோரியது.

எனினும் மக்களின் நலன் கருதி அந்த குடிநீர் விலையேற்றத்தை சிலாங்கூர் அரசு தடுத்து விட்டது.

### 7 நீர் மறுசீரமைப்புக்குப் பின்னரும் அடுக்குமாடி குடியிருப்பாளர்கள் உள்பட அனைத்து மக்களும் தொடர்ந்து 20 கன மீட்டர் இலவச நீரைப் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளதா?

அடுக்குமாடி குடியிருப்பாளர்கள் உள் பட அனைத்து மக்களும் தொடர்ந்து இலவசக் குடிநீரைப் பெறுவர். அடுக்குமாடி குடியிருப்புகளில் தற்போதுள்ள கூட்டு குடிநீர் மீட்டருக்குப் பதிலாக தனி மீட்டர்களைப் பொருத்துவதில் ஷபாஸ் நிறுவனம் விதிக்கும் கடும் நிபந்தனைகள் காரணமாக 20 கன மீட்டர் இலவச நீரை ஒவ்வொரு மாதமும் வழங்கும் திட்டத்தை மாநில அரசினால் அமல்படுத்த முடியவில்லை.

நீண்ட காலமாக நிலவி வரும் இப் பிரச்னைக்கு கும்புலான் டாருள் ஏசான் நிறுவனத்தின் சிறப்பு அமைப்பினால் தீர்வு காண முடியும் என மாநில அரசு நம்புகிறது.

| ஆண்டு | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| பயனீடு (கனமீட்டர் / மாதம்) | 35.0 | 34.8 | 34.5 | 34.0 | 32.8 |

**MWIG (Malaysia Water Industry Guide)** என்பது எரிசக்தி, பசுமைத் தொழில்நுட்பம் மற்றும் நீர்வள அமைச்சு, JBA மலேசியா, தேசிய நீர் சேவை ஆணையம் ஆகிய தரப்பினரின் ஒத்துழைப்போடு மலேசிய நீர் சேவை சங்கம் வெளியிடும் சஞ்சிகை ஆகும்.

### 8 இலவசக் குடி நீர்த் திட்டம் நீர் வீண் விரயமாகும் அளவுக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகிறதா?

20 கன மீட்டர் இலவச நீர் வழங்கப்படுவது நீர் விரயத்திற்கு வழி வகுக்கும் என்ற கூற்றில் உண்மையில்லை. ஒவ்வொரு இணைப்புக்குமான பயனீடு கீழ்க்கண்ட வகையில் குறைந்து வருவதை மலேசிய நீர் தொழில்துறை வழிகாட்டி புள்ளி விபரம் காட்டுகிறது.

### 9 நீர் சேவைத் துறை மறுசீரமைப்புச் செய்யப் பட்டாலும் லங்கட்-2 திட்டம் தொடருமா?

சிலாங்கூர் மாநிலத்தில் நீர் வளங்களை மேம்படுத்தக்கூடிய திட்டங்களை மாநில அரசு அடையாளம் கண்டுள்ளது. அத்திட்டங்களில் சில இங்கு பட்டியலிடப்பட்டுள்ளன.

* நாளொன்றுக்கு 5 கோடி லிட்டர் நீரை சுத்திகரிக்கும் ஆற்றல் கொண்ட புக்கிட் ஜெலுத்தோங் நீர் சுத்திகரிப்பு மையத்திற்கு மீண்டும் உயிரூட்டுவது.

* ஆற்றின் முகத்துவாரம் நோக்கி பாய்ந்தோடு நீரை தேக்கி வைக்கும் Hybrid Off River Augmentation System' (HORAS) எனும் புதிய நீர் வளத் திட்டத்தை அறிமுகப்படுத்துவது. HORAS அதிக பயன்தரக்கூடிய புதிய நீர் வளமாகத் திகழ்வதை லுவாஸ் மேற்கொண்ட பூர்வாங்க ஆய்வுகள் காட்டுகின்றன. SSP1 மற்றும் SSP3 சுத்திகரிப்பு மையங்கள் இயக்கத்திறனைக் காட்டிலும் 10 விழுக்காடு கூடுதல் ஆற்றலுடன் செயல்படுவதற்கும் அதிக சக்தி வாய்ந்த சுத்திகரிப்பு மையங்கள் அமைக்கப்படுவதற்கு இது வழி வகுக்கும்.

ஆற்றோர நீரை வடிகட்டும் River Bank Filtration Technique' (RBF)எனும் திட்டம் மீதான ஆய்வு கம்போங் ஜெண்டேராம் ஹ'லிர் அருகிலுள்ள சுங்கை லங்காட் சமவெளிப் பகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மலேசிய தேசிய ஹைட்ரோலிக் ஆய்வுக் கழகம் மேற்கொண்ட ஆய்வின் தொடர்ச்சியாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

அதே வேளையில் சிலாங்கூர், கோலாலம்பூர் கூட்டரசு பிரதேசம் மற்றும் புத்ரா ஜெயாவில் நீர் பங்கீடு மீதான மறுஆய்வை மேற்கொள்ள வல்லுநர்களையும் சிலாங்கூர் அரசு நியமித்துள்ளது.

### 10 நீர் உரிமையைத் தற்காக்கும் விவகாரத்தில் மக்கள் எத்தகைய பங்களிப்பை வழங்க முடியும்?

மக்களின் நலன் தொடர்ந்து பாதுகாக்கப்படுவதற்கு ஏதுவாக நடப்பு அரசாங்கத்தை தொடர்ந்து நிலை நிறுத்துவதன் மூலம் இந்த உயரிய முயற்சிக்கு மக்கள் ஆதரவைப் புலப்படுத்த முடியும்.

மிகவும் அத்தியாவசியத் தேவையாக விளங்கும் நீரை நிர்வகிக்கும் பொறுப்பை மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனமே நிர் வகிக்க வேண்டும் என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அடுத்த தலைமுறையின் உரிமைகள் தொடர்ந்து உறுதி செய்யப்படுவதற்கு இது மிகவும் அவசியமாகும்.

நீர் விநியோகத்தை தனியார் மயமாக்கியதன் மூலம் முன்பு நாம் தவறு செய்திருக்கலாம். கடந்த காலத்தவற்றை சரி செய்வதற்கு இது தக்க தருணமாக விளங்கு கிறது.